### 10–வது தேசிய கைத்தறி நாளை முன்னிட்டு

# 60 விருதாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி – மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு பங்கேற்றனர்

சென்னை, ஆக. 8-

பத்தாவது தேசிய கைத்தறி நாளை முன்னிட்டு மாநில அளவில் திறன்மிகு நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப் பட்ட 60 விருதாளர்களுக்கு 4.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலை கள் மற்றும் தமிழ்நாடு அரசால் செயல் படுத்தப்பட்டு வரும் நெசவாளர் நலத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார்

1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள் அன்று தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாக கைத் தறி தொழிலின் முக்கியத்துவம் மற் றும் அதன் பாரம்பரியம் மற்றும் நமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் தன்மை குறித்த விழிப்புணர்வை ஏற் படுத்தும் விதமாக 2015 ஆம் ஆண்டு முதல் தேசிய கைத்தறி நாள் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில் 07.08.2024 அன்று 10வது தேசிய கைத்தறி நாள் சென்னை, எழும்பூர், கோஆப்டெக்ஸ் வளாகத்தில் சிறப்புடன் கொண்டா டப்பட்டது. இவ்விழாவில் நீர்வளத் துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் மாநில அளவில் திறன்மிகு நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப் பட்ட 60 விருதாளர்களுக்கு 4.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலை கள் மற்றும் தமிழ்நாடு அரசால் செயல் படுத்தப்பட்டு வரும் நெசவாளர் நலத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில், அமைச் சர் பெருமக்கள் கைத்தறி துறையின் மூன்றாண்டு சாதனைகள் புத்தகத்தினை வெளியிட்டார்கள்.

20232024ஆம் ஆண்டில் சிறந்த வேலைப்பாடு கொண்ட இரகங்களை திறம்பட நெசவு செய்த நெசவாளர் களை கௌரவிக்கும் வகையில், 20 கைத்தறி இரகங்களில், இரகத்திற்கு தலா 3 விருதாளர்கள் வீதம் 60 விருதா ளர்களுக்கு 4.00 இலட்சம் ரூபாய்க் கான காசோலைகள் மற்றும் திறன்மிகு நெசவாளர் விருதுக்கான பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய வீடு கட்டுவதற்கான பணி ஆணைகள், முதியோர் ஓய்வூதிய திட் டத்தின் கீழ் 20 பயளாளிகளுக்கு மாதம் ரூ.1200/ வீதம் முதியோர் ஓய் வூதியம் வழங்கும் ஆணைகள், நெச வாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் காலஞ்சென்ற நெச வாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.1200/ வீதம் குடும்ப ஓய்வூ தியம் வழங்கும் ஆணைகள், முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 20 பயனாளிக ளுக்கு ரூ.15.25 இலட்சம் மதிப்பில் கடனுதவி ஆணைகள் வழங்கப்பட்டது.

மேலும், குழும வளர்ச்சித் திட்டம் மற்றும் கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் 23 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.2.40 இலட்சம் மதிப்பில் தறி உபக ரணங்கள், குழும வளர்ச்சி திட்டத்தி ன்கீழ் 16 கைத்தறி குழும வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் 7 கைத்தறி வடி வமைப்பாளர்களுக்கு மாத சம்பளம் ரூ.30,000/ வீதம் பணிநியமன ஆணை கள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் கைத்தறி நெசவாளர் களால் நுணுக்கமான வேலைப்பாடுக ளுடன் வடிவமைக்கப்பட்ட கைத்தறி இரகங்களும், திறன்மிகு நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட கண் கவர் கைத்தறி இரகங்களும் அழகுற காட்சிப்படுத்தப்பட்டது.

10வது தேசிய கைத்தறி நாளை யொட்டி தமிழ்நாடெங்கும் சிறப்பு டன் கொண்டாடும் வகையில் சரக அளவில் அமைந்துள்ள 20 கைத்தறி துறை சார்நிலை அலுவலகங்கள் வாயி லாக மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து கல்லூரிகளில் கைத்தறி நாள் விழா கொண்டாட்டங்கள் ஏற் பாடுகள் செய்யப்பட்டு, நெசவாளர் களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 69 பயனாளிகளுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 226 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய வீடு கட்டுவதற்கான பணி ஆணைகள், முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 92 பயளாளிகளுக்கு மாதம் ரூ.1200/ வீதம் முதியோர் ஓய்வூதியம் வழங்கும் ஆணைகள், நெசவாளர் குடும்ப ஓய் வூதியத் திட்டத்தின்கீழ் காலஞ்சென்ற நெசவாளர்களின் 40 வாரிசுதாரர்க ளுக்கு மாதம் ரூ.1200/ வீதம் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் ஆணைகள், முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 407 பய னாளிகளுக்கு ரூ.263 இலட்சம் மதிப் பில் கடனுதவி ஆணைகள், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 229 பயனாளிகளுக்கு 191 இலட்சம் ரூபாய்க்கான பணப்பலன் ஆணை கள், குழும வளர்ச்சித் திட்டம் மற்றும் கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் 67 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 14 இலட்சம் மதிப்பிலான தறி உபகர ணங்கள் வழங்கப்பட்டது. இத்துடன் மூத்த நெசவாளர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும், கைத்தறி நாள் விழா வினை முன்னிட்டு மாவட்ட அளவில் கைத்தறி கண்காட்சிகள், நெசவாளர் கள் பயன்பெறும் வகையில் மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை யுடன் இணைந்து சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது.

இவ்விழாவில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப் பிரமணியன், இந்து சமய அறநிலை யத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஐ.பரந்தாமன் எம். எல்.ஏ., துணை மேயர் எம்.மகேஷ் குமார், 61வது வார்டு மாமன்ற உறுப் பினர் பாத்திமா முசாபர் அஹமது, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற் றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை இயக்குநர் அ.சண்முக சுந்தரம், கோஆப்டெக்ஸ் செயலாட் சியர் தீபக் ஜேக்கப், அரசு உயர் அலு வலர்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் இருந்து ஊர்வலமாகச் சென்று மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண் டியன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வுகளில் த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம். சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என். போஸ், அரு.வீரமணி, க.மதியழகன், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, எம். லியாகத் அலி, ஆ.செந்தில், க.ராஜேந்திரன், சு.சண்முகம், தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, எம்.செந்தில் குமார், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், என்.சேட்டு, ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து. ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், பொன்.ராமலிங்கம், அ. இளங்குமரன், கே.பி.கே.டி.தங்கமணி, கே.பி.அய்யப்பன், அ.முத்து, சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், வி.ஆர். இளையராஜா, உமுருகேசன், பி.அண்ணாத்துரை, வை.விஜயக்குமார், முகம்மது ரிஷா, திலகவதி செந்தில், .அ.ரெத்தினம், எம்.எம்.பாலு மற்றும் கழக நிர்வாகிகள் 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் திட்டங்களில்

# மூத்த குடிமக்கள் - மாற்றுத் திறனாளிகளுக்குச் சலுகைகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!



சென்னை, ஆக.8-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை 7 மாதங்களில் 88,008 சுற் றுலா பயணிகள் முன்பதிவு செய்து, சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட் டரங்கில், தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவ கங்கள், படகு குழாம்கள் குறித்த மேலாளர்கள் மற் றும் மண்டல மேலாளர்க ளுக்கான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (7.8.2024) நடைபெற்றது. இக்கூட்டத் தில் சுற்றுலா, பண்பாடு மற் றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்று லாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகை யில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சி யில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உரு வாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதி கள், அமுதகம் என்ற பெய ரிலான உணவு விடுதிகள், சுற்றுலாத் பயணத்திட்டங் கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவை கள், தொலைநோக்கி இல் லங்கள் என சுற்றுலா பயணி களுக்கு பல்வேறு சேவை களை வழங்கி வருகின்றது.

கொரோனாவால் பாதிக் கப்பட்டு இருந்த சுற்றுலாத் துறையை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிக ளால் உணவகங்கள், தங் கும் விடுதிகள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு, புதுப் பொலிவு பெற்றதன் காரண மாக விரைவான வளர்ச் சியை பெற்று இந்தியாவி லேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது. மேலும் முதலமைச்சர் அவர்கள் கடந்த சில மாதங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகத்தின் 2 புதிய வால்வோ சொகுசு பேருந்து கள், 5 அதிநவீன சொகுசு பேருந்துகள் என 7 புதிய சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார்கள். இதன் காரணமாக சுற்றுலா பயணி கள் அதிக அளவில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா பயணத் திட்டங்களில் முன்பதிவு செய்து பயணம் மேற் கொண்டு வருகின்றார்கள்.

2023 ஆம் ஆண்டு தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழ கத்தின் சுற்றுலாத் திட்டங் கள் மூலம் 1,33,767 சுற்றுலா பயணிகள் முன்பதிவு செய்து சுற்றுலா மேற் கொண்ட நிலையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை 7 மாதங்களில் 88,008 சுற் றுலா பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 26 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வரு கின்றது. இவற்றில் 492 குளி ரூட்டப்பட்ட அறைகளும், 188 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத் தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 852 அறை கள் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்று லாத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் மூத்த குடிமக் கள், போர் விதவைகள் மற் றும் மாற்றுத்திறனாளிக ளுக்கு தள்ளுபடி சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுப வத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கா னல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங் குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட் டர்கள், மோட்டர் படகு கள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக் கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத் தம் 560 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பய ணத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்ப திவு செய்ய தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்க ளது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல் பட்டு வரும் தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன் பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044 25333333, 04425333444 ஆகிய தொலைபேசி எண் களை தொடர்பு கொண் டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாக வும் விவரங்களை பெற லாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பொதுமக்க ளுக்கு வேண்டுகோள் விடுத் தார்.

இக்கூட்டத்தில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திரு மதி.ச.கவிதா உள்பட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக்க ழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம் நாளை (10.8.2024 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் காட்டுமன்னார் கோயில் எம்.ஆர்.கே.பொறியியல் கல்லூரி அருகில் உள்ள கிருஷ்ணா திருமண மண்டபத்தில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர், முந்நாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர் மற்றும் ஒன்றியக் குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்றத் தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்டக் குழு, ஒன்றியக்குழு உறுப்பி னர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞரணி, மகளிரணி, மகளிர் தொண்ட ரணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. இல்லம்தோறும் இளைஞர்அணி உறுப்பினர் சேர்த்தல் சம்பந்தமாக
2. மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் சம்பந்தமாக
3. கழக ஆக்கப்பணிகள் சம்பந்தமாக
4. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இளைஞரணி சார்பில் பேச்சுப்போட்டி நடத்துவது சம்பந்தமாக

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### 6ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி

# திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் என் கௌதமன் தலைமையில் மாலை அணிவித்தனர்!

நாகை. ஆக.9 -

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் பிறந்த நாகை மாவட் டம் திருக்குவளையில் கலை ஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அஞ்சுகம் அறக்கட்டளை ஏற்பாட்டில் திருக்குவளை கலைஞர் இல்லத்தில் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்க ளின் சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலா ளர் என்.கௌதமன் தலை மையில் கழகத்தினர் மாலை அணிவித்து, மலர்தூவி மரி யாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் உயர் கல்வி துறை அமைச்ச ரின் உதவியாளர் சோமாஸ் கந்தன், தலைமைச் செயற் குழு உறுப்பினரும், அஞ்சு கம் அறக்கட்டளை உறுப்பி னர் இல.மேகநாதன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ். கே.வேதரத்தினம், தலை மைச் செயற்குழு உறுப்பி னர் க.ராஜேந்திரன், ப. கோவிந்தராசன், மாநில மீன வர் அணி துணைச் செயலா ளர் ஜி.மனோகரன், மாவட் டக் கழக துணைச் செய லாளர்கள் சோ. ரவிச்சந்தி ரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம்,

ஒன்றியக் கழகச் செயலா ளர்கள் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண் ணன், மகா.குமார், கே. பழ னியப்பன், என்.சதாசிவம், செல்வ.செங்குட்டுவன், உத யம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் இல. பழனியப் பன், பேரூர் கழகச் செயலா ளர்கள் மரியசார்லஸ்,முக மது சுல்தான், மாவட்ட ஊராட்சி துணைத் தலை வர்கௌசல்யா இளம்பரிதி, தலைஞாயிறு ஒன்றிய குழு தலைவர் ஆர்.ஜி. தமிழரசி,

மாவட்ட சார்பு அணி நிர் வாகிகள் சத்தியமூர்த்தி, தமேந்தி, புவனேஷ்வரி, சந் தோஷ், என்.மோகன்தாஸ், செல்வா, பி. தியாகராஜன், டேனியல்சத்தியா, லோகநா தன், எம்.செந்தில்,அங்காடி சேகர், வி.எம்.கே.பாலாஜி, ஊராட்சி உறுப்பினர் சோழன், மாவட்ட பிரதிநிதி மு.ப.ஞானசேகரன், நடரா ஜன், இராம. இளம்பரிதி ஒன்றியக் கழக நிர்வாகிகள் வை. சண்முகசுந்தரம், பார்த் திபன், திருநாவுக்கரசு, கலை ஞர் இல்ல காப்பாளர் தியா கராஜன், ஒன்றியக் குழு உறுப்பினர் சுதா ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கழக உள் ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள், உள்ளிட்ட ஏராளமான வர்கள் கலந்து கொண்ட னர்.

**நகர தி.மு.க. சார்பில் மரியாதை!**

நாகை நகர தி.மு.க. சார் பில் கலைஞர் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் அருகேவைக்கப் படுகின்ற கலைஞர் திருவருவப்படத்திற்கு நக ரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோக நாதன் ஆகியோர் முன்னி லையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் மாலை அணி வித்து மரியாதை செலுத்தி னார்.நாகை மாவட்டம் கீழ் வேளூர் ஒன்றியம் ஆந்தகுடியில் உள்ள கலை ஞர் சிலைக்கு கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பழனியப்பன் முன்னி லையில் தலைமைச் செயற் குழு உறுப்பினரும்,கீழ்வே ளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ப. கோவிந்தரா ஜன் தலைமையில் கழகத்தி னர் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சார்பில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக் டர் வே. செழியன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர்கள் சசிகுமார், தமிழ்ச்செல்வி, சிதம்பரம், ஒன்றிய பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, பேரூர் கழக செயலாளர் காங்கமுத்து, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வரதராஜன், மாவட்டத் தொழிலா ளர் அணி அமைப்பாளர் ராஜவேல், துணை அமைப்பாளர் கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் ராஜேந்திரன், துணை அமைப்பாளர் பைத்தூர் ரவி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சந்திரசேகரன், மாவட்ட பிரதிநிதி முருகன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சேகர், செந்தில், அய்யாகண்ணு, லிங்கம்மாள் பழனிசாமி, வீராசாமி, அன்பரசு, ஊராட்சித் தலைவர் கள் ஜோதி, முருகன், துணைத் தலைவர் செல்வம், கீரிப்பட்டி பேரூர் கவுன்சிலர்கள் ஆதிமூலம், ஸ்ரீதர், ஜெயராமன், முருகேசன் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சதீஷ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சத்யராஜ், மற்றும் கழக முன்னோடிகள் சீ.கா. பழனி, சேட்டு, செல்வம், சிவாஜி, இளங்கோ, மனோகரன், அன்பழகன், செந்தில், ஜோதிவேல், சிவக்குமார், அரியமுத்து, பழனிவேல்,நட ராஜன், வேலுமணி, பிரபு, ரஜினி,பாரத், கவியரசு, முத்து, குணசேகரன், பாலு, ரவி, முருகன், சோலை முத்து, ராஜா, சுரேஷ், ரங்கநாதன், சின்னச்சாமி, செல்வராஜ், கிரீஸ் குமார், ஐயப்பன், செல்வராஜ்,ராம சாமி, மோகன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ. செங்குட்டுவன்

### ஆகஸ்ட் 9 (1996)



பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**